329—

மாணவர் விடுதி

*32735—திரு. வெ. ஏழுமலை:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஒன்றியம், ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக விடுதிகள் தொடங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. செஞ்சி தொகுதியில், ஒலக்கூர் ஒன்றியத்தில் வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே நம்பி வாழுகின்ற மக்கள். இந்தப் பள்ளியில் மொத்தம் 1,599 மாணவ மாணவியர்கள் படிக்கிறார்கள். இவர்களில் 586 மாணவ மாணவியர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள். இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் சுமார் 25 கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள கோனேரிகுப்பம், நல்லாத்தூர், புள்ளிப்பாக்கம், நங்குணம், பாங்கொளத்தூர், பனையூர், கம்பூர், அன்னம்பாக்கம், கடவம்பாக்கம், நாவல்பாக்கம், மண்ணூர், நொளம்பூர், ஆட்சிப்பாக்கம், கூடலூர், மேல்பேட்டை, பாஞ்சாலம், கீழ் ஆகனூர், கூச்சிக் கொளத்தூர், பாதிரி, சாரம், ஏவலூர், புறங்கரை, கீழ் கரணை ஆகிய கிராமங்களிலிருந்து வந்து படிக்கின்றார்கள். மேலும், இந்தப் பள்ளி தனியார் பள்ளிக்கு ஈடாக பொது மக்களின் ஈடுபாட்டோடு கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அக்கறை கொண்டு, தாழ்த்தப்பட்ட

2003 ஏப்ரல் 25]

மாணவியருக்கு இலவச சைக்கிள், பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு, 5 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர் சுகாதார வளாகம், தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகளின் மேல்படிப்புக்கு கடனுக்குப் பதிலாக மானியம் வழங்கி வருகிறார்கள். அம்மா அவர்களின் ஆட்சியில் கருணையோடு, வரும் நிதியாண்டில் இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவிகளின் நலனைக் கருதி மாணவிகள் விடுதி அமைக்க பரிசீலிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். இருந்தாலும், நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ. சிவபெருமாள்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சில மாணவர் விடுதிகளில் 10 அல்லது 15 மாணவர்கள் அங்கு தங்கிப் படிக்கிறார்கள். அந்த 10, 15 மாணவர்களுக்கு ஒரு வார்டனும், ஒரு சமையலரும், ஒரு காவலாளியும் உள்ளார்கள். ஆனால், சில பகுதிகளிலே தனியார் பள்ளிகளிலே, நூற்றுக்கணக்கான மாணவர்கள் தனியார் விடுதிகளிலே தங்கிப் பயின்று வருகிறார்கள். அங்குள்ள அந்தத் தொகையை அவர்கள் கட்ட முடியாத ஒரு சூழ்நிலைகூட ஏற்படுகிறது. ஆகையால்தான், அந்த 10 மாணவர்கள் படிக்கும் அந்த மாணவர் விடுதியை, பக்கத்திலுள்ள மாணவர் விடுதிக்கு மாற்றி, அந்த நூற்றுக்கணக்கான தனியார் விடுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அங்கு ஒரு விடுதியை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே கொல்லங்கிணறு என்ற இடத்தில் ஒரு அரசு மாணவர் இல்லம் இருக்கிறது. அங்கு 10 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். அந்த மாணவர் விடுதியை மாற்றி நூற்றுக்கணக்கானவர்கள் பயிலும் கீழாம்புடிமான்-புதியவலன் மேல்நிலைப் பள்ளியிலுள்ளவர்களுக்கு ஒரு அரசு மாணவர் விடுதியை

[2003 ஏப்ரல் 25

அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதியில் 10 மாணவர்கள்தான் தங்கிப் படிப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, முறையாகத் தகவல் கொடுத்தால் கண்டிப்பாக நம்முடைய புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். குறைவாகத் தங்கிப் படிக்கின்ற விடுதிகளில், அதிகமான எண்ணிக்கை வரக்கூடிய விடுதிகளுக்கு ஈடுசெய்வது போலத்தான், நம்முடைய அரசு அனைத்து மாணவர்களும் தங்கிப் படிக்கின்றவகையில், விரும்பி வருகின்ற மாணவர்களைச் சேர்த்துக்கொண்டுதான், இப்போது தங்கிப் படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை தனியாக அனுப்பி வைத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 330, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

330—

மின் வசதி

***19029—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரப் பகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவொற்றியூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் ஏற்கெனவே மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.